தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, ஆனி 19, திருவள்ளுவர் ஆண்டு-2048

2017 ஜூலை 3, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதுஒன்று இல்"

தாம் வாழ்நாளில் பெற்ற உயர்வு மிகுந்த புகழைத் தவிர இந்த நில உலகில் அழியாமல் நிலைத்து நிற்பது வேறு எதுவும் இல்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

111—

சாலையை விரிவுபடுத்துதல்

***7220—திரு. ப. பலராமன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, சுண்ணாம்புகுளத்திலிருந்து அண்ணாமலைச்சேரி வரையிலான சாலையை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பொன்னேரி தொகுதியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், திரு. ப. பலராமன் அவர்கள், சுண்ணாம்புகுளம்-அண்ணாமலைச்சேரிக்குட்பட்ட சாலையை விரிவுபடுத்துவதற்குரிய அனுமதியை வனத் துறை வழங்குமா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தச் சாலையை விரிவுபடுத்துவதற்கான கருத்துரு சம்பந்தப்பட்ட நெடுஞ்சாலைத் துறையினால், தேசிய வன விலங்குகள் வாரியத்திற்கு இணையதளம்மூலம் விண்ணப்பிக்கும்பட்சத்தில், உரிய அனுமதி பெற தொடர் நடவடிக்கை மேற்கொண்டு, அந்தச் சாலையை விரிவுபடுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.

திரு. ப. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெய்வப் புலவர் எழுதியது திருக்குறள், தமிழக அரசியல் வரலாற்றில் சாதனை என்றாலே ஒரே குறள் அது எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மொழிக்கு உயிரெழுத்து பன்னிரெண்டு, தமிழர்களின் வாழ்விற்கு உயிரெழுத்து மூன்று, அதுதான் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) நாடெங்கும், வீடெங்கும் நிறைந்திருப்பவர் எங்கள் அம்மா. உள்ளமெல்லாம், இல்லமெல்லாம் நிலைத்திருப்பவர் எங்கள் அம்மா. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நிலைத்த புகழுக்கு என் நெஞ்சார்ந்த வணக்கம்.

கனிவு, பணிவு, துணிவு மூன்றும் சேர்ந்த நல்வரவு. இனிமை, எளிமை, வலிமை, மூன்றும் சேர்ந்த எங்கள் தலைமை, எதிர்க்கின்ற சிலருக்கோ, அவர் ஓர் ஆச்சரியம், எதிர்பார்க்கும் தமிழர்களுக்கோ, அவர் ஓர் அட்சயப் பாத்திரம். அவர்தான் எங்கள் தமிழ்நாடு முதலமைச்சர், அண்ணன் எடப்பாடியார் அவர்கள். அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதிக்குட்பட்ட, நம்முடைய மாநில நெடுஞ்சாலைத் துறையின்மூலமாகப் பராமரிக்கப்பட்டு வரும் சுண்ணாம்புகுளம் முதல் அண்ணாமலைச்சேரி வரை உள்ள சாலை 3/0 கிலோ

2017 ஜூலை 3]

மீட்டர் முதல் 9/0 கிலோ மீட்டர் வரை உள்ள 6 கிலோ மீட்டர் சாலை, ஓபசமுத்திரம் முதல் சிறுவாக்கல் பாலம் வழியாக பூங்குளம், சின்ன மாங்கோடு, பெரிய மாங்கோடு, புதுகுப்பம், கள்ளூர், கள்ளூர்குப்பம் வரை செல்கின்றது. மேற்படி சாலை செல்லும் வழியில், வனத் துறைக்குச் சொந்தமான இடம் உள்ளது. நெடுஞ்சாலைத் துறையால் சாலையை மேம்படுத்தி அகலப்படுத்தவும், பலப்படுத்தவும் வனத் துறையின் தடையில்லா சான்று தேவைப்படுகிறது. இதனால் சுமார் 25 கிராம பொதுமக்கள் பயன்பட்டு வருகின்ற காரணத்தால், வனத் துறையினரின் தடையில்லா சான்று கிடைத்திட ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களோடு கலந்து பேசி, அதிலுள்ள குறைபாடுகளைக் களைந்து, மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்தும், மேற்படி நெடுஞ்சாலையை விரிவுபடுத்த தடையில்லா சான்று கிடைக்க ஆவன செய்தும், அங்கிருக்கின்ற மக்களின் பயன்பாட்டிற்கு அந்தச் சாலையைக் கொண்டுவருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள் குறிப்பிட்ட பொன்னேரி தொகுதி, சுண்ணாம்புகுளம் முதல் அண்ணாமலைச்சேரிக்கு இடைப்பட்ட 6 கிலோ மீட்டர் நீளமும், 3.75 மீட்டர் அகலமும் கொண்ட சாலை பழவேற்காடு பறவைகள் சரணாலயப் பகுதியில் அமைந்துள்ளது. சரணாலயப் பகுதி மற்றும் அதனைச் சுற்றி 10 கிலோ மீட்டருக்குள் மேற்கொள்ளப்படும் வனத் துறைக்கு சம்பந்தம் இல்லாத பிற பணிகளுக்கு மாண்புமிகு உச்ச நீதிமன்ற நீதிப்பேராணை எண் 460/2014, நாள் 4-12-2014-ல் வழங்கப்பட்ட ஆணையின் அடிப்படையில் தேசிய வன விலங்கு வாரியத்தின் அனுமதியைப் பெறவேண்டும் என மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம் வழிகாட்டுதல் நெறிமுறையை வகுத்துள்ளது.*

எனவே, பழவேற்காடு பறவைகள் சரணாலயப் பகுதிக்குள் அமைந்துள்ள இச்சாலையை விரிவுபடுத்துவதற்கான கருத்துரு சம்பந்தப்பட்ட நெடுஞ்சாலைத் துறையினால் தேசிய வன விலங்கு வாரியத்திற்கு இணையதளம் மூலமாக விண்ணப்பிக்கும்பட்சத்தில், உரிய அனுமதி பெற தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள் அதற்குரிய விண்ணப்பங்களை அனுப்புவதற்கு எங்களுடைய வனத் துறையை அணுகினால், அவர்கள் இணையதளம் மூலமாக விண்ணப்பித்து, அந்தச் சாலையை விரிவுபடுத்துவதற்குரிய சூழ்நிலையை உருவாக்குவார்கள். கடந்த 6 ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் இந்தப் பறவைகள் சரணாலயத்திற்கு மட்டும் பறவைகள் கணக்கெடுப்பு, சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகள், பறவைகள் வேட்டையாடுதலைத் தடுத்தல், கூட்ட அரங்கை மேம்படுத்துதல் போன்ற பணிகளுக்கு ரூ.67.94 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் சரணாலயத்தின் மேம்பாட்டிற்கென ரூ.19.46 இலட்சம் நிதியினை செலவு செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் சிறுநியம் திரு. பலராமன் அவர்கள் கவலைப்படத் தேவையில்லை. அந்தச் சரணாலயத்தை பலப்படுத்துவதற்கும், அந்தச் சாலையை செப்பனிடுவதற்கும் உரிய கருத்துருகளை சம்பந்தப்பட்ட நெடுஞ்சாலைத் துறையினால், தேசிய வன விலங்கு வாரியத்திற்கு இணையதளம் மூலம் விண்ணப்பித்தால், துறையின் மூலமாக நிதி ஆதாரத்தை வைத்து விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.*

திரு. ப. பலராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களின் விரிவான பதிலுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பழவேற்காடு முதல் பசியாவரம் வரை உள்ள தரைப் பாலத்திற்கு மாநில நெடுஞ்சாலைத் துறை மூலம் சுமார் 12.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு*

தயாரிக்கப்பட்டுள்ளது. வனத் துறை மூலமாக அதற்குண்டான தடையில்லா சான்றிதழ் வழங்க காலதாமதம் ஏற்படுவதால், திட்டப் பணிகள் துவங்கப்படாமல் இருக்கின்றன. இதனால், இடமணி, பசியாவரம், தாங்கல் பெரும்புலம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மீனவப் பொதுமக்கள் மற்றும் நூற்றுக்கணக்கான பள்ளி மாணவர்கள் மழைக் காலங்களில் பழவேற்காடு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு செல்வதற்கு ஆற்றைக் கடந்து செல்ல முடியாமல் தவிக்கின்றார்கள். இந்நிலையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அந்தத் தரைப் பாலத்தை விரைவில் கட்டி முடித்திட, வனத் துறை தடையில்லா சான்றிதழ் வழங்க ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ப. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் வனத் துறை அலுவலகம் ஒன்றைக் கட்டித் தருமாறும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் மூலமாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டும். என்னைக் கேட்டீர்களென்றால், என்னால் ஒன்றும் செய்ய முடியாது. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் பாலம் கட்டுகின்ற பணி நெடுஞ்சாலைத் துறையின்கீழ் வருகின்றது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும், வனத் துறையின்மூலம் அந்த அலுவலகம் கட்டப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். நிதி ஆதாரத்திற்கேற்ப அந்தக் கருத்துருவை பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

[2017 ஜூலை 3

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பழனி தொகுதிக்குட்பட்ட மத்திய மலைப் பகுதியாக இருக்கின்ற வில்பட்டி ஊராட்சிக்குட்பட்ட அஞ்சூரான்மந்தை, குறிப்பாக, புலியூர், பாரதி அண்ணா நகர், பேத்துப்பாறை ஆகிய பகுதிகளில் கடந்த ஒரு மாத காலமாக சிறுத்தை நடமாட்டம் அதிகமாக இருக்கின்றது. இது எங்களுடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஒரு விவசாயியினுடைய வீட்டில் கிட்டத்தட்ட 15-க்கும் மேற்பட்ட ஆடுகளைக் கொன்று அந்த சிறுத்தையானது அந்தப் பகுதியில் அட்டகாசம் செய்துகொண்டிருக்கின்றது. எனவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அந்த சிறுத்தையால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அச்சத்தைப் போக்க முன்வர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில்குமார் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்த நிகழ்ச்சி எந்தப் பகுதியில் நடந்திருக்கின்றது என்பது குறித்த எந்தச் செய்தியும் பத்திரிகையின் வாயிலாகவோ, தொலைக்காட்சியின் வாயிலாகவோ அல்லது அலுவலகத்தின் மூலமாகவோ இதுவரை வரப்பெறவில்லை. இருந்தாலும், தம்பி மாண்புமிகு திரு. செந்தில்குமார் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றபடி அந்த சிறுத்தையின் நடமாட்டம் உண்மையாக இருக்கும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட வனத் துறையினர்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். கூண்டுகளை வைத்து சிறுத்தையினைப் பிடித்து மக்களுக்கு தொல்லை இல்லாமல், வன விலங்குகள், ஆடுகள் போன்றவை வதைபடாமல் இருப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மையெல்லாம் இந்த அவையில் அமரவைத்து,*

அழகு பார்த்த அன்னை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய வழியிலே ஆட்சி செய்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

வால்பாறை தொகுதிக்குட்பட்ட டாப்சிலிப் செல்லும் சாலை, மிகவும் பழுதடைந்துள்ளது. ஆனைமலையிலிருந்து டாப்சிலிப் மற்றும் பரம்பிக்குளம் செல்லும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. அந்த இடம், சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வந்து செல்லும் இடம். மேலும், சுற்றுலாப் பயணிகள் டாப்சிலிப்பிலிருந்து வனத் துறைக்குள் யானைகள் முகாமைப் பார்க்கச் செல்லும் சாலையும் மிகவும் பழுதடைந்துள்ளது. இந்தச் சாலைகளைச் சரி செய்தால், சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எனவே, அந்தச் சாலைகள் சரி செய்யப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வால்பாறை தொகுதி, டாப்சிலிப் பகுதியில் சாலைகள் பழுதடைந்துள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். சாலைகள் பாதுகாப்புச் சட்டப்படி, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு, அந்தச் சாலைகளில் பழுது நீக்கப்படுகின்ற பணிகள், 10 வருடங்கள், 5 வருடங்கள் காலத்திற்குத் தொடர் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே, இது குறித்து, மனுக்களாகவும் கொடுத்து எங்கள் கவனத்தை ஈர்த்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலைகளைப் பழுது பார்த்து, சுற்றுலாப் பயணிகள் மற்றும் அப்பகுதியிலுள்ள வன விலங்குகளுக்கு பாதிப்புகள் ஏற்படாத வகையில், நிதிநிலைக்கேற்ப, விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.*

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதி, அச்சரப்பாக்கம் ஒன்றியத்தில், வேடந்தாங்கல் ஊராட்சி இருக்கிறது. வேடந்தாங்கல், தமிழ்நாட்டில் அனைவரும் அறிந்த ஊர். வேடந்தாங்கலுக்குச் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகிறார்கள். ஆனால், அது, வனத் துறையின்கீழ் இருக்கிறது. வேடந்தாங்கல், வனத் துறையின்கீழ் இருப்பதால், அங்கு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான எந்தவிதமான வசதிகளும் இதுவரை செய்து தரப்படவில்லை. இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், வனத் துறை சார்பில், அங்கு ஒரு Guest House, விடுதி இருக்கிறது. அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற நான், அங்கு சென்று ஒருநாள் தங்கியபோது, என்னிடத்தில்கூட ஒரு நாள் வாடகையை வாங்கிவிட்டுத்தான் அனுப்பினார்கள். ஆனால், உலக அளவில் உள்ள பறவைகள் ஆராய்ச்சியாளர்கள் பல பேர் அங்கு வருகை புரிகின்றனர். அவர்கள் தங்குவதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும், அந்த ஊரினுடைய வளர்ச்சிக்காகக் கடைகளைக் கட்டி, அதன்மூலம் அந்த ஊரின் வருமானத்திற்கும், அங்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளுக்கு தங்குவதற்கு வசதியையும் ஏற்படுத்தித் தர முடியுமா என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள், வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில், அவர்கள் தங்கியபோது அசௌகரியங்கள் ஏற்பட்டதாகக் கூறியிருக்கிறார்கள். அது குறித்து, அவர்களிடம் கருத்துகள் பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட வனத் துறையினரிடம் பேசி, சட்டத்திற்குட்பட்டு அதுபோன்ற சம்பவங்கள் இனி நடைபெறாத வகையில், அவை சரி செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, அங்கு வருகிற அறிஞர்கள், பறவை ஆராய்ச்சியாளர்கள் தங்குவதற்கு வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குரிய

2017 ஜூலை 3]

கருத்துருவை சம்பந்தப்பட்ட வனத் துறை அதிகாரிகளுக்கு அவர் கொடுத்தாரேயானால், அங்கிருக்கின்ற சரணாலயத்தில், பறவைகளின் வரவைப் பொறுத்தும், நிதிநிலையை ஆராய்ந்தும், அதற்கேற்ப ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

112—

புதிய மின்மாற்றி

***6044—திரு. சே. கருணாஸ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, திருவாடனை ஊராட்சி ஒன்றியம், சேமன்வயல் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய சேமன்வயல் கிராமத்தில், புதியதாக ஒரு 100 KV மின்மாற்றியுடன் 1.4 கி.மீ. தூரத்திற்கு உயர் மின்னழுத்தக் கம்பிகள் அமைப்பதற்குத் தேவையான திட்டப் பணிகள் தயார் செய்து, பணிகள் துவங்கவுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், இருக்கையில் இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.